**O.S.No.145/2019** **தேதி – 19.02.2026**

**பி.வா.சா.3.– காளிராஜன்**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை –**

நான் 9ம் வகுப்பு படித்துள்ளேன். நான் இந்த வழக்கில் எத்தனவாது பிரதிவாதி என்றால் 6ம்பிரதிவாதி ஆகும். நான் தாக்கல் செய்த வழக்கில் பிரமான வாக்குமூல விபரங்களை வழக்கறிஞருக்கு யார் சொன்னது என்றால் என்னுடைய பெரியப்ப மகன் கூறினார். நான் 1ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொண்டு மெமோ தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இவ்வழக்கின் வாதி எனக்கு அக்கா உறவு ஆகும். வாதியின் தகப்பனார் பெயர் சர்க்கரை தேவர் ஆகும். ஏற்கனவே சாட்சி சொன்ன அண்ணாமலை, சர்க்கரைத்தேவர் மற்றும் எனது அப்பா கணேசன் ஆகியோர்கள் உடன்பிறந்த சகோதரர்கள் ஆவர். வாதி இந்த வழக்கில் எந்தெந்த கிராமத்தில் உள்ள சொத்து பற்றிய விபரம் எனக்கு தெரியுமா என்றால் வடபட்டி கிராமம் மற்றும் நெடுங்குளம் ஆகிய இரண்டு கிராமத்தில் சொத்துக்கள் உள்ளது. எனது தாத்தா மாரியப்ப தேவர் இறந்த பிறகு, எனது அப்பா, சர்க்கரைத்தேவர், அண்ணாமலை ஆகியோர்கள் சொத்துக்களை வாய்மொழியாக பிரித்து அனுபவித்து வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. ஒன்றாகத்தான் அனுபவித்து வருகிறார்கள். நான் தாக்கல் செய்த பி.வா.சா.ஆ.5ல் ஆவணத்தின் அடிப்படையில் எனது பெயர்தான் உள்ளது என்றால் சரிதான். ஆனால் சொத்து பாகம் செய்து அவரவர் அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி சுந்தரமூரத்தி கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் அவ்வாறு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்காள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
ஸ்ரீவில்லிபுத்தூர்.